

மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், திருச்செந்தூர் நகராட்சி ஆலந்தலை கிராமத்தில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளை சூழ்ந்துள்ள மழை நீரை வெளியேற்றுவது தொடர்பாக பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி , உடன்குடி ஒன்றியச் செயலாளர் டி.பி.பாலசிங், திருச்செந்தூர் துணை நகர் மன்றத் தலைவர் ஏ.பி.ரமேஸ், நகரச் செயலாளர் வாள் சுடலை, மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




தென்காசி தெற்கு மாவட்டம் கடையநல்லூர் நகர தி.மு.க.சார்பில் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல்நாயகரின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது. நகர செயலாளர் அப்பாஸ் வரவேற்புரையாற்றினார். நகர மன்றத் தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன், தலைமைக் கழகப் பேச்சாளர் நாஞ்சில் சம்பத் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர். உடன் தொகுதி பார்வையாளர் ஆவின் ஆறுமுகம், முத்துப்பாண்டி, ஆறுமுகசாமி, ஷெரிப், அப்துல்காதர், சாதிர், சேகனா, ஷேக் தாவுது, சாமிதுரை உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### டி.பி.எம்.மைதீன்கான் தலைமை! சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில்

# நெல்லை மாநகரில் அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் - அமைச்சர் ஐ.பெரியசாமி சிறப்புரை!

நெல்லை, மார்ச் 8 -

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழி காட்டுதலின்படி நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் எல்லோருக்கும் எல்லாம்" திராவிட மாடல்" நாயகரின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் பேட்டை பஜார் திடல் பழைய மீனாட்சி தியேட்டர் அருகில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணைப் பொது செயலாளரும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான ஐ. பெரியசாமி பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் எல்லோருக்கும் எல்லாம் "திராவிட மாடல்"நாயகரின் பிறந்த நாள் விழா மற்றும் நிதி நிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் பேட்டை பஜார் திடல் பழைய மீனாட்சி தியேட்டர் அருகில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், தொகுதி பார்வையாளர்கள் ஹெலன் டேவிட்சன்,வசந்தம் ஜெயக்குமார்,தீர்மான குழு உறுப்பினர் சுப.சீதாராமன்,மத்திய மாவட்ட அவைத்தலைவர் முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ். லெட்சுமணன், பேச்சி பாண்டியன், மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம்,பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன், துபாய்சாகுல், அன்டன் செல்லத்துரை, மாநகராட்சி மேயர் சரவணன், துணைமேயர் ராஜ், மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள்,மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த்,ஒன்றிய செயலாளர்கள் அருள்மணி,மாரியப்பன், மாவட்டப் பிரதிநிதி ஜவகர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் வரவேற்புரையாற்றினார். நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளரும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ. பெரியசாமி பேசியதாவது.

தமிழக வரலாற்றில் பாளையங்கோட்டை என்றால் கழகத்தின் கோட்டை என்பதை அறிவோம்.வரலாறு ரீதியாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கும் பாளையங் கோட்டைக்கும் சம்பந்தம் உண்டு. 38 மாவட்டங்கள் உள்ளது.நெல்லை மாவட்டம் போல நல்ல மாவட்டத்தை நான் பார்த்ததில்லை.சட்டப்பேரவை உறுப்பினர் அப்துல் வகாப் பேசுவையில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை தொகுதியில் 2 லட்சம் ஓட்டுகள் அதிகமாக வாங்கித் தருவோம் என்று கூறினார். நிச்சயமாக தமிழ்நாட்டில் நடைபெறும் நாடாளுமன்ற தேர்தலில் அதிக வாக்குகள் பெற்ற தொகுதியாக திருநெல்வேலி தொகுதி இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.இங்குள்ள மக்கள் எதார்த்தமான நிலையில் இருக்கிறார்கள். லட்சக்கணக்கானோர் கொள்கை பிடிப்புடன் உள்ளனர். அரசியல் களம் கண்ட கூட்டம் தான் இது.

#### துரோகம் செய்த ஒன்றிய அரசு!

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் பெய்த அதிகன மழையால் மக்கள் பாதிக்கப்பட்ட போது உடனுக்குடன் அமைச்சர்களை அனுப்பி அனைத்து உதவிகளையும் செய்து கொடுக்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். ஒன்றிய அரசுஅதிகாரிகளும், அமைச்சர்களும் வெள்ள பாதிப்புகளை பார்ப்பது போல் நடித்து மக்களுக்கு துரோகம் செய்துவிட்டனர்.சல்லி பைசா கூட இதுவரை வெள்ள பாதிப்புக்கான நிதியாக ஒன்றிய அரசு கொடுக்க

வில்லை. வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு ரூபாய் 6000 நிவாரணமும்,1000 ம் நிவாரணமும், வீடு இழந்தவர்களுக்கு ரூபாய் 4 லட்சம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிவித்து முதலமைச்சர் அவர்கள் அதனை தொடங்கி வைத்துள்ளார்.

தமிழகத்திலிருந்து ஜி.எஸ்.டி.வரி வருவாய் மூலம் பலகோடி செல்கிறது.அதிகமாக வரி செலுத்தும் மாநிலங்களில் முதன்மை மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.தமிழகத்தின் வரி வருவாய் எல்லாம் ஒன்றிய அரசு வாங்கிக் கொண்டு,ராஜஸ்தான் உத்திரபிரதேசம்,குஜராத்,மத்திய பிரதேசம் போன்ற அனைத்து தவறுகளும் செய்து,அரசை ஏமாற்றும் மாநிலங்களுக்கு வரியை வாரி வழங்கி கொடுப்பது நியாயமா? என மக்களே சொல்ல வேண்டும். 450 கோடி ரூபாய் நிதி வெள்ள பாதிப்பு களுக்காக ஒன்றிய அரசு ஒதுக்கியது.சிறிய, சிறிய பாதிப்புகளை சரி செய்ய ஆண்டு தோறும் ஒதுக்கப்படும் நிதி மட்டுமே அதுவாகும்.வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்துவிட்டு ஒன்றிய அரசு திருநெல்வேலி மக்களுக்கு அல்வாவை கொடுத்துவிட்டது. வரும் தேர்தலில் ஒரு ஓட்டு கூட மோடிக்கு போடக்கூடாது. திருநெல்வேலி மக்கள் அவர்களுக்கு அல்வா கூட கொடுக்கக் கூடாது. அவர்கள் ஜீரோவாக தான் இருக்க வேண்டும்.

#### கழக ஆட்சியில்தான் சமூக நீதி திட்டங்கள்!

முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு நிதி நெருக்கடி இருந்தாலும் ஆண்களுக்கு கல்லூரியில் படிக்க ரூபாய் 1000 திட்டத்தை கொண்டு வர வேண்டும் என இந்த பட்ஜெட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிதியை ஒதுக்கியுள்ளார். அனைத்து துறைகளிலும் சமூக நீதி திட்டங்கள் தி.மு.க ஆட்சி காலத்தில் தான் கொண்டுவரப்பட்டது.குடும்பத் தலைவிக்கு வழங்கப்படும் மகளிர் உரிமைத்தொகை ரூபாய் 1000 ஒரு கோடியே 18 லட்சம் பேருக்கு வழங்கி வரும் நிலையில் கூடுதலாக 10 லட்சம் மகளிருக்கு விரைவில் வழங்கப்பட உள்ளது. எந்த ஆட்சியும் சொன்னதை செய்தது கிடையாது. சொன்னதையும்!சொல்லாததையும்! செய்து கொடுக்கும் ஒரே ஆட்சி தி.மு.க ஆட்சியாக தான் உள்ளது. அதுதான் "திராவிட மாடல்" ஆட்சி ஆகும்.மக்களுக்கு எல்லாம் செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட முதல்வர் அவர்களை

செயல்பட விடாமல் நிதி ஆதாரத்தை முடக்கி விட நினைக்கிறார்கள். கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில் கொண்டுவரப்பட்ட 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தின் ஊதியம் தினமும் கொடுக்கப்பட வேண்டும். மூன்று, நான்கு மாதங்களாக அது கொடுக்கப்படாமல் உள்ளது. தமிழகத்தை வஞ்சிக்கும் ஒன்றிய அரசு இனியும் வரக்கூடாது. நமக்கு வரும் நிதியை உரிய நேரத்தில் வழங்காமல் இருந்து தேர்தல் நேரத்தில் வழங்கினால் அது நமக்கு சாதகமாகும் என அவர்கள் நினைக்கிறார்கள். புதிய கொள்கை மற்றும் லட்சியத்தால் மறைமுகமாக மதச்சார்பின்மையை மாற்ற பா.ஜ.க. நினைக்கிறது ஜனநாயகத்தின் சர்வாதிகாரம் தலைதூக்கக் கூடாது. நமக்கான உரிமைகளை ஒன்றிய அரசு பறிக்கும்போது நாம் வாழவட்டியாக இருக்க முடியாது. நமக்கான உரிமைகளை பெற்றிட வேண்டும்.

#### வரலாறு தெரியாமல் பேசும் பிரதமர்!

தி.மு.க.வை அழிப்போம் ஒழிப்போம் என பிரதமர் வரலாறு தெரியாமல் பேசுகிறார்.பிரதமர் வந்து 10 ஆண்டுகள் தான் ஆகிறது. தி.மு.க.விற்கு தனி வரலாறு உள்ளது எமர்ஜென்சி காலத்தில் 500 தி.மு.க.வினரை சிறையில் அடைத்தால் தி.மு.க அழியும் என நினைத்தார்கள். தி.மு.க என்றும் மக்கள் மனதில் உள்ளது.தி.மு. க.வை அழிக்கவும் முடியாது, ஒழிக்கவும் முடியாது.தமிழக மக்கள் மனதில் அழிக்க முடியாத சக்தியாக தி.மு.க. இருக்கிறது.ஜாதி மதம் வைத்து சந்தர்ப்பவாத கூட்டணியை எதிர் தரப்பினர் அமைத்துள்ளனர். அவர்களது கூட்டணிக்கு யாரும் செல்லவில்லை.அரசியல் கொள்கைகளை அடிப்படையாக வைத்து தி.மு.க தலைமையில் கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது.

எல்லோருக்கும் எல்லாம் மக்கள் கேட்டு இல்லை என்று சொன்னது இல்லை,நம் முதலமைச்சர் தளபதி அவர்கள்.அப்படிப்பட்ட முதலமைச்சரை நாம் பெற்றுள்ளோம் இவ்வாறு கழக துணை பொது செயலாளர் - அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் கிரிஜா குமார்,அணி அமைப்பாளர்கள் மகளிர் தொண்டரணி அனிதா,அயலக அணி செந்தில்,காசி மணி,இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், மாமன்ற உறுப்பினர்கள் உலகநாதன்,ரவீந்தர்,ஜலியட், உள்பட அனைத்து சார்பு அணி நிர்வாகிகள்,பகுதி கழக,வட்டக் கழக நிர்வாகிகள், பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சி நிறைவில் மாமன்ற உறுப்பினர் ஷேக் மன்சூர் நன்றியுரையாற்றினார்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் செய்திருந்தார்.

### அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில்

# கிருஷ்ணகிரி மாவட்ட அவசர செயற்குழுக் கூட்டம்!

## தே.மதியழகன் - தளி ஒய்.பிரகாஷ் அறிக்கை!





கிருஷ்ணகிரி, மார்ச் 8 -

தமிழக உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்டப் பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி தலைமையில் ஒருங்கிணைந்த கிருஷ்ணகிரி மாவட்ட அவசர மாவட்ட செயற்குழுக் கூட்டம் நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ., ஒய் பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிக்கை தெரிவித்துள்ளனர்.

அவர்களது அறிக்கை வருமாறு:

திராவிட முன்னேற்றக் கழக தலைவரும், திராவிட மாடல் நாயகரும், தமிழக முதலமைச்சருமான தளபதியார் அவர்கள் வருகிற 11.03.2024 - திங்கட்கிழமை அன்று தர்மபுரி மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார்.

இதனையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் இன்று (08.03.2024 - வெள்ளிக்கிழமை) மதியம் 03 30 மணிக்கு கிருஷ்ணகிரி ஸ்ரீ தேவராஜ் மஹால் திருமண மண்டபத்தில்

தமிழக உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சரும்,

கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி தலைமையிலும், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளரும், ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் எம்எல்ஏ ஆகியோரது முன்னிலையில் இந்த அவசர செயற்குழு கூட்டம் நடைபெற உள்ளது.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழகமூத்த முன்னோடிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள்,

மாவட்ட ஊராட்சி குழு, ஒன்றிய குழு, நகராட்சி, பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர், கவுன்சிலர்கள், பஞ்சாயத்து தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர் உள்ளிட்ட நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### டெல்லி நோக்கிய விவசாயிகளின் போராட்டத்தை ஒடுக்கும் பா.ஜ.க. அரசு

# 147 விவசாய சங்கத் தலைவர்கள் தடுப்புக் காவலில் வைப்பு!

## விவசாயிகளின் போராட்டம் 24வது நாளை எட்டியது!

புதுடெல்லி, மார்ச் 8 -

டெல்லியில் விவசாயிகளின் முற்றுகைப் போராட்டத்தை தடுக்க, விவசாய சங்கத் தலைவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வேளாண் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பஞ்சாப், ஹரியானா உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் கடந்த மாதம் 13ம் தேதி டெல்லி நோக்கி போராட்டத்தை துவங்கினர். விவசாயிகளுக்கு எதிராக ஒன்றிய பா.ஜ.க. அரசு பல்வேறு அடக்குமுறைகளை கையாண்டு வருகிறது.

விவசாயிகளின் போராட்டம் 24வது நாளை எட்டிய நிலையில், விவசாயிகளை டெல்லி செல்ல விடாமல் ஒன்றிய அரசும், ஹரியானா காவல்துறையும் தடுத்து நிறுத்தியுள்ளது.

இந்நிலையில் வருகிற 10ம் தேதி மதியம் 12மணி முதல் மாலை 4 மணி வரை ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட உள்ளதாகவும் சம்யுக்தா கிசான் மோர்ச்சா அறிவித்துள்ளது.

பல மாநிலங்களைச் சேர்ந்த விவசாயி களின் மகா பஞ்சாயத்து வரும் 14ம் தேதி டெல்லியில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் விவசாயி களின் போராட்டத்தை ஒடுக்க காவல்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

தொடர் போராட்டங்களை ஒடுக்க, 147 விவசாய சங்க தலைவர்கள் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளதாக விவசாய சங்க தலைவர் சர்வான் சிங் பாந்தர் தெரிவித்துள்ளார்.

### தஞ்சை தெற்கு மாவட்டம்

# அதிராம்பட்டினம் கிழக்கு, அதிராம்பட்டினம் மேற்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் மற்றும் நகரக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் தஞ்சை தெற்கு மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட அதிராம் பட்டினம் நகரம், அதிராம்பட்டினம் கிழக்கு, அதிராம் பட்டினம் மேற்கு ஆகிய 2 நகரக் கழகங்களாக பிரிக்கப்படுகிறது. அவ்வாறு பிரிக்கப்பட்ட இவ்வொன்றியங்களில், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, கீழே குறிப்பிடப்பட்டுள்ள நகரப் பொறுப்பாளர் மற்றும் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

மேற்சொன்னவாறு பிரிக்கப்பட்ட அதிராம்பட்டினம் கிழக்கு, அதிராம்பட்டினம் மேற்கு ஆகிய நகரங்கள் பின்வரும் வார்டுகள் கொண்டதாக அமையும்.

**அதிராம்பட்டினம் கிழக்கு நகரம் (பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி) : வார்டுகள்** - *3, 4, 5,14, 15, 16, 21, 22, 23, 24, 25, 26, 27ஆகிய 13 வார்டுகள்*

**அதிராம்பட்டினம் கிழக்கு நகரம்**

பொறுப்பாளர் : **இராம. குணசேகரன்**
34/1, அண்ணா தெரு,
அதிராம்பட்டினம்,
தஞ்சை மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. எஸ்.பி.கோடி, மாரியம்மன்கோவில் தெரு, 2. இ.சரஸ்வதி, சுப்பிரமணியகோவில் தெரு, 3. டி.முத்துராமன், பழஞ்செட்டித் தெரு, 4. பி. காதர் இப்ராஹிம், ஆறுமுககிடங்கி தெரு, 5. பி.செய்யது முகம்மது, கடற்கரை தெரு.

**அதிராம்பட்டினம் மேற்கு நகரம் (பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி) : வார்டுகள் -** *1, 2, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 17, 18, 19, 20 ஆகிய 14 வார்டுகள்*

**அதிராம்பட்டினம் மேற்கு நகரம்**

பொறுப்பாளர் : **எஸ்.எச். அஸ்லம்,**
92ஏ, நடுத் தெரு,
அதிராம்பட்டினம்,
தஞ்சை மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. என்.ஏ.முகம்மது யூசுப், மேலத் தெரு 2. சி. தில்லைநாதன், முத்தம்மாள் தெரு 3. ஏ.எம்.ஒய்.அன்சர்கான், புதுத் தெரு 4. திருமதி எஸ்.ரிபாயா, நடுத் தெரு 5.எம்.சேக்தாவூத், கீழத் தெரு.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 7.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

### டெல்லியில் போராட்டத்தில் பங்கேற்ற

# விவசாயி சுட்டுக்கொலை: நீதி விசாரணைக்கு உத்தரவு!

புதுடெல்லி, மார்ச் 8 –

டெல்லி முற்றுகை போராட்டம் நடத்திய விவசாயி சுபகரன்சிங் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரத்தில், நீதி விசாரணை நடத்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஹரியானா பஞ்சாப் எல்லையில் உள்ள கானவுரியில் கடந்த 21ம் தேதி போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் மீது ஹரியானா காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சுபகரன் சிங் என்ற 21 வயது விவசாயி கொல்லப்பட்டார். விவசாயி மரணமடைந்த விவகாரத்தில் பஞ்சாப் காவல்துறையினர் அண்மையில் கொலை வழக்குப்பதிவு செய்தனர். இந்நிலையில், விவசாயி சுபகரன் சிங் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரத்தில், நீதி விசாரணை நடத்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பான வழக்கை விசாரித்த பஞ்சாப் ஹரியானா உயர்நீதிமன்றம், வழக்கு விசாரணையின்போது விவசாயிகள் மீது தடியடி நடத்தப்பட்டதா? அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு என்ன மாதிரியான குண்டுகள் பயன்படுத்தப்பட்டன, வழக்குப்பதிவு செய்வதற்கு ஏன் காலதாமதம்? சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்க தாமதமானது எதனால்? என்று ஹரியானா, பஞ்சாப் அரசுகளிடம் சரமாரியாக கேள்வி எழுப்பியது.

இதைத்தொடர்ந்து, விவசாயி சுபகரன் சிங் கொல்லப்பட்ட சம்பவத்தில் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் 3 நபர் குழு விசாரிக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. பஞ்சாப், ஹரியானாவை சேர்ந்த ஏடிஜிபி பதவியில் உள்ள தலா ஒரு காவல் அதிகாரி குழுவில் இடம்பெற உத்தரவிட்டுள்ளது.



இராமநாதபுரம் தொகுதி நாடாளுமன்றத் தேர்தலில் கடந்த முறை பெற்ற வாக்குகளை விட பல மடங்கு பெற்று மகத்தான வெற்றி பெற அனைவரும் சிறப்பாக செயல்பட வேண்டும். மாவட்டச் செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த கூட்டத்தில், சுந்தரராஜன், பவானி ரஜேந்திரன், முத்துராமலிங்கம், கணேசன், குழந்தைவேலு, முருகேசன், உ.திசை வீரன், சாயல்குடி ராமர், கருப்பையா, ஆதித்யன், மிசா அகமது தம்பி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.




நெல்லை கிழக்கு மாவட்டம் களக்காடு நகர தி.மு.க. சார்பில் எல்லோருக்கும் எல்லாம் "திராவிட மாடல் நாயகரின் பிறந்தநாள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம் களக்காடு தேரடி திடலில் நகரச் செயலாளர் மணிசூரியன் தலைமையில் மாவட்டப் பொருளாளர் ஜார்ஜ் கோசல், ஒன்றியச் செயலாளர்கள் ராஜன், செல்வ கருணாநிதி, நகர் மன்றத் தலைவர் சாந்தி சுபாஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று உரையாற்றினார். உடன் ஞானதிரவியம் எம்.பி. மாநில பேச்சாளர் சூரியசேவியர், தொகுதி பார்வையாளர் ஜோசப் ஸ்டாலின், சுடலைக்கண்ணு, ஆரோக்கிய எட்வின் உள்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளனர்.